ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2320/46 - 2023 පෙබරවාරි මස 22 වැනි බදාදා - 2023.02.22
2320/46 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1969 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாட்டு) சட்டம்**

1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்கள் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆவது பிரிவின் கீழ் நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராகிய ரணில் விக்கிரமசிங்க ஆகிய என்னால் பின்வரும் விதிமுறைகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2023, பெப்புருவரி மாதம் 22.

1A - PG 6252 — 376 (2023/03)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**ஒழுங்குவிதிமுறைகள்**

1. இந்த ஒழுங்கு விதிகள் **"2023 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்கம் கட்டண விதிமுறைகளின் மீதான இறக்குமதிக் கட்டுப்பாட்டு விதிமுறைகள்"** ஆகக் குறிப்பிடப்படுகின்றது.

2. 2022 ஆம் ஆண்டின் 10 இலக்க கட்டண விதி முறைகள் மீதான இறக்குமதிக் கட்டுப்பாட்டு விதி முறைகள் மற்றும் 2022 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளால் தொடர்சியாக திருத்தப்பட்ட 2022 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆம் திகதிய 2278/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 07 இலக்க கட்டண விதி முறைகள் மீதான இறக்குமதிக் கட்டுப்பாட்டு விதிமுறைகள் இதன் மூலம் மேலும் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளன.

3. 4(ஈ) யூன் 24 திததியிடப்பட்ட வத்தமானி எண்.2285/ 19 இல் வெளியிடப்பட்ட, 2022 ஆம் ஆண்டின் எண்.10 கட்டண விதி முறைகள் மீதான இறக்குமதி கட்டுப்பாட்டு விதி முறைகளின் ஒழுங்கு முறை எண். 4(உ) இல் உடனடியாகச் உட்சேர்க்கப்படுகிறது. பின்வருமாறு அதனை வாசிக்கலாம்,

"4(உ) குறிப்பிட்ட முனைய சேவைகளை வழங்குவதற்காக இலங்கையில் உள்ள எந்தவொரு துறைமுக/விமான நிலையங்களிலும் தமது முனையங்களை பராமரித்து இயக்குவதற்கு அவசியமான சரக்குகளை இறக்குமதி செய்வதற்கான தமது கொடுப்பனவுகளை அத்தகைய முனைய செயற்பாட்டாளர்கள் ஈட்டுகின்ற அந்நியச் செலாவணியிலிருந்து செலுத்தி வருகின்றனர்.

இலங்கையில் உள்ள எந்தவொரு துறைமுகம்/விமான நிலையங்களில் அத்தகைய பொருட்கள் வந்துசேரும்போது அல்லது அதற்கு முன்னராக, துறைமுகங்களுக்குப் பொறுப்பான செயலாளரின் முன் பரிந்துரையின் பேரில், அத்தகைய பொருட்களின் இறக்குமதியானது முனைய செயற்பாட்டாளர்களால் இறக்குமதி செய்யப்படும்."

4. 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 23 ஆம் தேதியிட்ட வர்த்தமானி எண். 2294/29 இல் வெளியிடப்பட்ட 2022 ஆம் ஆண்டின் எண். 12ஆம் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) விதிமுறைகளின் ஒழுங்குமுறை எண். 5(i) நீக்கப்பட்டு, மற்றும் புதிய ஒழுங்குமுறை எண். 5(i) பின்வருமாறு வாசிக்கப்படும்.

"5(i) எந்தவொரு அரசாங்க நிறுவனங்களாலும் அல்லது இலங்கை முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களினால் அல்லது எந்தவொரு அரசாங்க நிறுவனங்களாலும் நேரடியாகப் பயன்படுத்தப்படும் நோக்கத்திற்காக பிரத்தியேகமாக வழங்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களினால் சமர்ப்பிக்கப்படும் முன் அனுமதிக்கான கோரிக்கையானது, தொடர்ந்து திருத்தப்பட்ட, 2022 ஆம் ஆண்டின் கட்டண விதிமுறைகள் எண்.07 இறக்குமதிக் கட்டுப்பாட்டு விதிமுறைகளின் கீழ், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்படும்.

(அ) வழக்கு அடிப்படையில், நீர்ப்பாசனம் அல்லது சக்தி அல்லது நீர் அல்லது வீதி அபிவிருத்தி ஆகிய விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரின் பரிந்துரையின் பேரில், இலங்கையில் உள்ள எந்தவொரு துறைமுகம்/விமான நிலையங்களுக்கு அவ்வாறான பொருட்கள் வருவதற்கு முன்னர் அனுமதி பெறப்பட வேண்டும்.

(ஆ) மேலே (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைத் தவிரந்த மற்ற எல்லா சந்தர்ப்பங்களிலும், திரைச்சேரி செயலாளரின் பரிந்துரையின் பேரில், அத்தகைய பொருட்கள் இலங்கையில் உள்ள எந்தவொரு துறைமுகம் /விமான நிலையத்திற்கு வருவதற்கு முன்னர், அனுமதி பெறப்பட வேண்டும்.

5. இந்த ஒழுங்குவிதிமுறைகளை திறம்பட நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான 'செயல்பாட்டு வழிமுறைகள்' இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம், இலங்கை சுங்க திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் அனுமதிப்பத்திரதார வங்கிகளுக்கு வழங்க வேண்டும்.

6. மேல் திருத்தப்பட்ட 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23ஆம் திகதிய 2294/29 இலக்க அதிவிசேட வர்த்தமானியின் 5(i) ஆம் இலக்க ஒழுங்குவிதியில், விதிகளை மீறி செய்யப்படும் எந்தவொரு இறக்குமதி தொடர்பாக இலங்கை சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகத்திடம் கலந்தாலோசிக்கப்படல் வேண்டும்.

EOG 03 - 0084

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.